பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

13 07 2025 7 15
ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. தீவிரவாதிகளுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் மகளிரின் பங்களிப்பு பாராட்டுதலுக்குரியது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
2. வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், அரசுமுறைப் பயணமாக சிங்கப்பூர் மற்றும் சீன நாடுகளுக்கு இன்று புறப்பட்டுச் செல்கிறார்.
3. காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 28 பேர் உயிரிழந்தனர்.
4. மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களின் ஒருசில பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு கனமழை முதல் அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. உலகக் கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா மேலும் ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளது.

இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தீவிரவாதிகளுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் மகளிரின் பங்களிப்ப பாராட்டுதலுக்குரியது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

லக்னோவின் சௌக் பகுதியில் உள்ள **Padikali** கோவில் வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை திறந்து வைத்துப் பேசிய அவர், இந்த காளி கோவிலை பிரம்மாண்டமான முறையில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக கூறினார்.

பெண் அதிகாரிகள் மற்றும் விமானிகளின் பங்களிப்புடன் பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் அழிக்கப்பட்டதாகக் கூறினார்.

கார்கில் போரின் 26வது ஆண்டு வெற்றி தினத்தை கொண்டாடும் இந்த தருணத்தில், தாய்நாட்டிற்காக இன்னுயிரை தியாகம் செய்த கேப்டன் மனோஜ் பாண்டே உட்பட துணிச்சல் மிக்க அனைத்து வீரர்களையும் நினைவுகொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.

கூர்கா ரைஃபிள்ஸ் படைப்பிரிவின் முழக்கமாக உள்ள ‘மஹாகாளி கூர்காளி’, பாதுகாப்புப் படையினரின் துணிச்சலுக்கு உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், அரசுமுறைப் பயணமாக சிங்கப்பூர் மற்றும் சீன நாடுகளுக்கு இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

தனது பயணத்தின் முதற்கட்டமாக சிங்கப்பூர் செல்லும் அவர், அந்நாட்டு அதிபர் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

பின்னர் சீனா செல்லும் அவர், ரியான்ஜி நகரில் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தில் பங்கேற்கிறார்.

இதனிடையே இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு உறவுகள் குறித்து விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பீகார் மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்கு முன்னதாகவே நிறைவடையும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அடுத்த மாதம் ஒன்றாம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்ப்பதற்கு உரிய ஆவணங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்க கூடுதல் அவகாசம் தேவைப்படும் பட்சத்தில் ஆகஸ்ட் 30ஆம் தேதி வரை சமர்ப்பிக்கலாம் என்று ஆணையம் கூறியுள்ளது.

வாக்குச்சாவடி நிலைய அதிகாரிகள் இதுவரை நான்கு புள்ளி ஆறு ஆறு கோடி வாக்காளர் படிவங்களை அதற்கான இணையதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<>>>>

இதனிடையே பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த முகாமிற்கு எதிராக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தொடர்ந்து விமர்சித்து வருவது ஏற்படையதல்ல என்று மத்திய இணைமைச்சர் திரு. ராம்தாஸ் அத்வாலே தெரிவித்துள்ளார்.

பட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் ஆணையம் சுதந்திரமான அமைப்பு என்றும், வாக்காளர் பட்டியலில் திருத்தங்கள் செய்வது அதன் அதிகாரவரம்பிற்குள் உள்ளது என்றும் கூறினார்.

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளில் குறை காண்பது சிறந்த நடைமுறை அல்ல என்று திரு. ராம்தாஸ் அத்வாலே தெரிவித்தார்.

<<<<>>>>

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் நாக்பூர் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையமும் இணைந்து பருத்தி உற்பத்திக்கான சிறப்பு முன்னோடி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் பருத்தி சாகுபடி அதிகரிக்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பருத்தி நடவுக்கான விதைகளை அரசு இலவசமாக வழங்கியுள்ளது தங்களுக்கு பயனுள்ளதாக இருந்தது என்று நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

<<<<>>>>

காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 28 பேர் உயிரிழந்தனர்.

மத்திய காஸா பகுதியில் உள்ள **Deir Al-Balah**-வில் நடத்தப்பட்ட தாக்குதலில் 4 குழந்தைகள் உட்பட 13 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

தெற்கு காஸாவில் உள்ள **Khan Yunis**-ல் 15 பேர் உயிரிழந்துள்ளதாக அந்த செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இதனிடையே கடந்த 48 மணி நேரத்தில் காஸாவில் உள்ள ஆயுத தளங்கள், சுரங்கப் பாதைகள், ஹமாஸ் அமைப்பின் உள்கட்டமைப்புகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மத்தியப்பிரதேசம், கிழக்கு ராஜஸ்தான் மாநிலங்களின் ஒருசில பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு கனமழை முதல் அதிகனமழைக்கான வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து இந்த மாநிலங்களுக்கு கனமழைக்கான ஆரஞ்சு நிற எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், ராஜஸ்தான் மாநிலங்களின் ஒருசில இடங்களில் அடுத்த 4 நாட்களுக்கு கனமழை தொடரும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

மேற்குவங்கம், சிக்கிம், பீகார், ஜார்கண்ட், ஒடிசா உள்ளிட்ட நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள மாநிலங்களில் அடுத்த 2 தினங்களுக்கு மழை நீடிக்கும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே ஹிமாச்சலப்பிரதேசத்தில் பெய்துவரும் கனமழை வரும் 18ஆம் தேதி வரை நீடிக்கும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

இம்மாநிலத்தில் உள்ள மண்டி, சிம்லா, சோலன், சிர்மௌர் மாவட்டங்களில் இன்று கனமழைக்கான மஞ்சள் நிற எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

அம்மாநிலத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட நிலச்சரிவுகள் காரணமாக 2 தேசிய நெடுஞ்சாலைகள் உட்பட 250 சாலைகள் மூடப்பட்டுள்ளதாக அம்மாநில அவசர கால செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

மண்டி மாவட்டத்தில் சண்டிகர் - மணாலி தேசிய நெடுஞ்சாலையில் **Sarmil** பகுதி அருகே ஏற்பட்டுள்ள நிலச்சரிவு காரணமாக போக்குவரத்து முற்றிலும் தடைபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

உலகக் கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா மேலும் ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளது.

மேட்ரிடில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிவில் ஜோதி சுரேகா வெண்ணம் இப்பதக்கதைக் கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா 2 வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது.

-------------

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியின் 20 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில் இந்தியா 2 தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

கிர்கிஸ்தானின் **Bishkek**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் 57 கிலோ எடைப் பிரிவில் அங்குஷ் மற்றும் 79 கிலோ எடைப்பிரிவில் அமித் தங்கப் பதக்கம் வென்றனர்.

65 கிலோ எடைப்பிரிவில் அஷ்வனி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

70 கிலோ எடைப்பிரிவில் சௌரவும், 97 கிலோ எடைப்பிரிவில் விஷாலும் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

-------------

இந்தியாவுக்கு எதிரான 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3வது நாளான நேற்று இங்கிலாந்து தனது இரண்டாவது இன்னிங்சின் ஆட்டநேர இறுதியில் விக்கெட் இழப்பின்றி 2 ரன் எடுத்துள்ளது.
லார்ட்சில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சில் 387 ரன் எடுத்துள்ளது. கே.எல். ராகுல் சதமடித்தார்.
இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 387 ரன் எடுத்துள்ளது.

---------------

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான நேற்று இந்தியா தனது முதல் இன்னிங்சின் ஆட்டநேர இறுதியில் 7 விக்கெட் இழப்புக்கு 450 ரன் எடுத்துள்ளது.

**Beckenham**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

---------------

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் போலந்தின் **Iga Swiatek** பட்டம் வென்றார்.

--------------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டெனனிஸ் போட்டியில் இந்தியாவின் பிரார்த்தனா தாம்ப் ரே – நெதர்லாந்தின் **Arianne Hartono** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 4-6, 6-3, 12-0 என்ற செட் கணக்கில் கனடாவின் **Kayla Cross** – அமெரிக்காவின் **Marribella** இணையை வென்றது.

--------------

துனீஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

------------

2024ஆம் ஆண்டுக்கான **Tenzing Norgay** தேசிய சாகச விருதுக்கு விண்ணப்ப நடைமுறைகள் தொடங்கியிருப்பதாக மத்திய விளையாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**<<<<The End>>>>**